**மெட்ரோ இரயில் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) சட்டம் 2002-ன் கீழ் குற்றங்களும் அபராதங்களும் / தண்டனைகளும்**

| வ. எண் | பிரிவு | குற்றங்கள் | தண்டனைகள் / அபராதங்கள் |
|---|---|---|---|
| 1 | 59 | மெட்ரோ இரயிலில் மது அருந்திவிட்டுப் பயணித்தல் அல்லது பொதுமக்களுக்கு இடையூறு / தொல்லை விளைவித்தல் | ₹2,500/- வரை அபராதம் + பயணக் கட்டணம் பறிமுதல் அல்லது இரயிலில் இருந்து வெளியேற்றப்படுவர் |
| 2 | 60 | அருவருக்கத்தக்க அல்லது ஆட்சேபனைக்குரிய பொருட்களை மெட்ரோ இரயிலுக்குள் கொண்டு வருதல் அல்லது கொண்டு வரச் செய்தல் | ₹2,500/- வரை அபராதம் + மெட்ரோ இரயில் நிர்வாகத்திற்கு ஏற்படும் இழப்பு, காயம் அல்லது சேதத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும் |
| 3 | 61 | மெட்ரோ ரயிலுக்குள் ஆபத்தான பொருட்களைக் கொண்டு வருதல் அல்லது கொண்டு வரச் செய்தல் | 4 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை + ₹5,000/- வரை அபராதம் + மெட்ரோ இரயில் நிர்வாகத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும் |
| 4 | 62 | மெட்ரோ இரயில் வளாகத்தில் எவ்விதமான போராட்டங்கள் நடத்துதல் / இரயில் பெட்டிகள் அல்லது வளாகத்தில் சுவரொட்டிகள் ஒட்டுதல், எழுதுதல், வரைதல் / வளாகத்தை விட்டு வெளியேற மறுத்தல் | ₹10,000/- வரை அபராதம் |
| 5 | 63 | இரயிலின் மேற்கூரை போன்றவற்றின் மீது ஏறிப் பயணித்தல் | 1 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ₹5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் + இரயிலில் இருந்து வெளியேற்றப்படுவர் |
| 6 | 64 | மெட்ரோ இரயில் வளாகத்தில் அத்துமீறி / அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக நுழைதல் அல்லது தங்கியிருத்தல் | ₹5,000/- வரை அபராதம் |
| | | உரிய அனுமதியின்றி மெட்ரோ இரயில் பாதையில் (Track) நடப்பது | ₹20,000/- வரை அபராதம் |
| 7 | 67 | இரயில் அல்லது அதன் உபகரணங்களின் இயக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்துதல் | 4 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது ₹5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் |
| 8 | 68 | மெட்ரோ இரயில் அதிகாரிகளின் பணிக்கு இடையூறு விளைவித்தல் | 1 ஆண்டு வரை சிறைத் தண்டனை அல்லது ₹1,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் |
| 9 | 69 | முறையான அனுமதிச் சீட்டு (Pass) அல்லது பயணச்சீட்டு (Ticket) இன்றிப் பயணித்தல் அல்லது அனுமதிக்கப்பட்ட தூரத்தைத் தாண்டிப் பயணித்தல் | 1. பயணித்த தூரத்திற்கான சாதாரண ஒருவழிப் பயணக் கட்டணம் அல்லது இரயில் புறப்பட்ட நிலையத்திலிருந்து சாதாரண ஒருவழிப் பயணக் கட்டணம்.<br>2. ஏற்கனவே செலுத்திய கட்டணத்திற்கும் பயணித்த தூரத்திற்கான கட்டணத்திற்கும் இடையேயான வித்தியாசம் + ₹50/-3. துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் கட்டணம் மற்றும் கட்டண வித்தியாசத்தைக் கோரிய பிறகும் செலுத்தத் தவறினால் அல்லது மறுத்தால், மெட்ரோ இரயில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு மெட்ரோ இரயில் அதிகாரியும், செலுத்த வேண்டிய தொகையை ஓர் அபராதத் தொகையைப் போல வசூலிப்பதற்காக எந்தவொரு பெருநகர மாஜிஸ்திரேட் (Metropolitan Magistrate) அல்லது முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்திரேட்டை (Judicial Magistrate of the first class) அணுகலாம். |

| வ. எண் | பிரிவு | குற்றங்கள் | தண்டனைகள் / அபராதங்கள் |
|---|---|---|---|
| 10 | 70 | இரயிலில் உள்ள தகவல் தொடர்புச் சாதனங்களில் தலையிடுதல் அல்லது அபாய மணியை *(Alarm Bell)* தவறாகப் பயன்படுத்துதல் | ₹*10,000/-* வரை அபராதம் |
| 11 | 71 | அனுமதிச் சீட்டு அல்லது பயணச்சீட்டை மாற்றுதல், சேதப்படுத்துதல் அல்லது போலி செய்தல் | ₹*20,000/-* வரை அபராதம் |
| 12 | 72 | பொது அறிவிப்புகளைச் சேதப்படுத்துதல் அல்லது அழித்தல் | ₹*20,000/-* வரை அபராதம் |
| 13 | 73 | உரிய அனுமதியின்றிப் பொருட்களை விற்பனை செய்தல் | ₹*5,000/-* வரை அபராதம் |
| 14 | 74 | *1.* உள்நோக்கத்துடன் ஒரு இரயிலை விபத்துக்குள்ளாக்குதல் அல்லது நாசவேலை செய்தல்<br><br>*2.* உயிரிழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அல்லது உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய கடுமையான உடல் காயத்தை விளைவிக்கும் நோக்கத்துடன் நாசவேலை செய்தல் | *1.* ஆயுள் தண்டனை அல்லது *10* ஆண்டுகள் வரை கடுமையான சிறைத் தண்டனை.<br><br>*2.* மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை. |
| 15 | 75 | அனுமதியின்றிப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்தல் | ₹*25,000/-* வரை அபராதம் |
| 16 | 76 | மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பொதுமக்களுக்கு உள்நோக்கத்துடன் காயம் ஏற்படுத்துதல் அல்லது காயம் ஏற்படுத்த முயற்சித்தல் | ஆயுள் தண்டனை அல்லது *10* ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை |
| 17 | 77 | கவனக்குறைவாகவோ அல்லது அலட்சியமாகவோ செயல்பட்டு மெட்ரோ இரயிலில் பயணிக்கும் மக்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவித்தல் | *1* ஆண்டு வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம், அல்லது இரண்டும் |
| 18 | 78 | குறிப்பிட்ட மெட்ரோ இரயில் சொத்துக்களை சேதப்படுத்துதல் அல்லது அழித்தல் | *10* ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை |
| 19 | 79 | வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் அல்லது தவறுகளால் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் நபர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுத்துதல் | *7* ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை |